Good Food, Good Life



**'அதிக மொருமொருப்பு, அதிக பாலாடை' ('Extra Crispy, Extra Creamy') நெஸ்லே KIT KAT இலங்கையில் மீளவும் அறிமுகம்!**

*நெஸ்லே நிறுவனத்தின் முதற்தர சர்வதேச சொக்கிலேட்டு வர்த்தகநாமம் இலங்கையில் நுகர்வோரின் நாவிற்கு சுவையூட்டி அவர்களை பரவசப்படுத்தவுள்ளது*

சர்வதே அளவில் நன்மதிப்புப் பெற்று அனைவராலும் விரும்பப்படுகின்ற நெஸ்லே நிறுவனத்தின் KIT KAT வர்த்தகநாமம் இலங்கையிலுள்ள சொக்கிலேட்டுப் பிரியர்களின் பேராவலுக்கு மத்தியில் உள்நாட்டுச் சந்தையில் மீளவும் கிடைக்கவுள்ளதுடன், உலகில் அனைவராலும் விரும்பப்படுகின்ற நெஸ்லேயின் சொக்கிலேட்டு தற்போது 'அதிக மொருமொருப்பு, அதிக பாலாடையுடன்' உள்நாட்டு நுகர்வோருக்குக் கிடைக்கவுள்ளது தொடர்பில் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது.

*''இலங்கையிலுள்ள நுகர்வோர் தமக்குப் பிரியமான வர்த்தகநாமமான KIT KAT சொக்கிலேட்டின் சுவையை மீளவும் அனுபவிக்கும் தருணத்தை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்த நிலையில் KIT KAT போன்ற சர்வதேச அளவில் அனைவராலும் விரும்பப்படுகின்ற உற்பத்தியொன்றை மீளவும் அறிமுகப்படுத்துவதையிட்டு உலகில் முன்னிலை வகிக்கும் சொக்கிலேட்டு உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்று என்ற வகையில் நெஸ்லே லங்கா நிறுவனம் பெருமிதமடைந்துள்ளது. உலகில் அனேகமானோரால் சுவைக்கப்பட்டு உச்ச ஸ்தானத்தில் திகழும் சொக்கிலேட்டு வகைகளுள் ஒன்று என்ற வகையில் இந்த இனிப்பு தின்பண்ட உற்பத்திவகையை இலங்கையில் மீளவும் அறிமுகம் செய்வதையிட்டு நாம் மிகுந்த பூரிப்படைந்துள்ளதுடன், KIT KAT மூலமாக உள்நாட்டிலுள்ள எமது நுகர்வோர் 'அவர்களது இடைவேளையின் போது சுவைத்து மகிழ்வதற்கு' அவர்களைப் பரவசப்படுத்துவதை நாம் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம்''* என்று நெஸ்லே லங்கா பீஎல்சீ நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. அலொய்ஸ் ஹொவ்பவர் அவர்கள் குறிப்பிட்டார்.

மொருமொருப்பான மெல்லிய தித்திப்பான மேற்பாகத்தைக் கொண்டுள்ள அருஞ்சுவைமிக்க நெஸ்லேயின் சொக்கிலேட்டு வகையான KIT KAT ஆனது உலகெங்கிலும் நுகர்வோரின் விருப்பத்திற்குரிய தெரிவாக உச்ச ஸ்தானத்தில் திகழ்வதுடன், நெஸ்லேயின் முதற்தர சர்வதேச அளவிலான சொக்கிலேட்டு வர்த்தகநாமமாகவும் விளங்குகின்றது. சர்வதேச அளவில் அனைவராலும் சுவைத்து மகிழப்படுகின்ற இந்த உற்பத்தி அதன் மகத்தான சுவை மற்றும் அதிசிறந்த தரம் ஆகியவற்றிற்காக பெயர்பெற்று விளங்குவதுடன், 'இடைவேளையொன்றை எடுத்துக்கொள்ளுங்கள், KIT KAT ஒன்றைச் சுவைத்து மகிழுங்கள்' ('Have a break, have a KIT KAT') என்ற பிரபலமான தனது மகுட வாசகத்திற்கேற்ப புகழ்பெற்று விளங்குகின்றது.

*''மரபுத்தன்மைவாய்ந்த அந்தஸ்தைச் சுமந்துள்ள ஒரு வர்த்தகநாமமான KIT KAT சர்வதேச தின்பண்ட உற்பத்திகள் சந்தையில் மிகவும் உயர்வான, வெற்றிகரமான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. உலகெங்கிலும் ஒவ்வொரு செக்கன் பொழுதிலும் 150 நெஸ்லே KIT KAT சொக்கிலேட்டுக் கீலங்கள் சுவைக்கப்பட்டுவருவது இந்த உற்பத்தியின் மகத்தான வெற்றிக்கும் பிரபலத்திற்கும் நன்கு சான்றுபகர்கின்றது. உள்நாட்டுச் சந்தையில் நெஸ்லே நிறுவனமானது ஒரு பிரதான உணவு மற்றும் பானவகை உற்பத்தித் தொழிற்பாட்டாளராகத் திகழ்வதுடன், எமது உற்பத்தி வகைகளின் கீழ் கிடைக்கப்பெறுகின்ற இந்த புதிய அறிமுகமானது நாட்டில் எமது முன்னிலை ஸ்தானத்தை மேலும் ஸ்திரப்படுத்துவதாக அமையும் என்பதில் நாம் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளோம்''* என்று நெஸ்லே லங்கா பீஎல்சீ நிறுவனத்தின் வர்த்தக நடவடிக்கைகளுக்கான சிரேஷ்ட துணைத் தலைமை அதிகாரியான திரு. முஹம்மட் ஹம்ஸா அவர்கள் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள KIT KAT பிரியர்கள் அனைவரும் KIT KAT சொக்கிலேட்டுக்களை சௌகரியமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இது நாடளாவியரீதியிலுள்ள சுப்பர்மார்க்கட்டுகள் மற்றும் நவீன விற்பனை நிலையங்கள் அனைத்திலும் கிடைக்கப்பெறுகின்றதென 'நல்லுணவு, நல்வாழ்வு' நிறுவனமாகிய நெஸ்லே குறிப்பிட்டுள்ளது. Millers Limited நிறுவனத்தினரே இந்த உற்பத்தியின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்களாக உள்ளனர்.

\- முற்றும் -

**புகைப்படத் தலைப்பு:** நெஸ்லே லங்கா பீஎல்சீ நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. அலொய்ஸ் ஹொவ்பவர் அவர்கள் KIT KAT சொக்கிலேட்டின் முதலாவது பெட்டியை மில்லர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான திரு. டிலானோ டயஸ் அவர்களிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்துவைக்கின்றார். திரு. டில்ஷான் ஹுன்னன், உற்பத்தி முகாமையாளர், மில்லர்ஸ் லிமிட்டெட், திரு. யூட் பெர்னாண்டோ, நிறைவேற்றுப் பணிப்பாளர் - CQF மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி - கொத்மலே ஹோல்டிங்ஸ் மற்றும் திரு. முஹம்மட் ஹம்ஸா, வர்த்தக நடவடிக்கைகளுக்கான சிரேஷ்ட துணைத் தலைமை அதிகாரி, நெஸ்லே லங்கா பீஎல்சீ ஆகியோரும் படத்தில் இடமிருந்து வலப்புறமாகக் காணப்படுகின்றனர்.